கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர்

**POP.No. 42/2019**

PW – 1

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1989ம் ஆண்டின் 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்) திரு. கே.ராஜசேகர் பி.காம்., பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | C.A.சேரன் |
| தந்தை பெயர் | அங்கப்பமுதலியார் |
| வயது | 67 |

முதல் விசாரணை

நான் மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். மேலும் எனது சாட்சியத்தை உறுதிபடுத்துவதற்காக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அதனை குறியீடு செய்ய கேட்டுக் கொள்கிறேன். 28-03-2015 தேதியிட்ட நகை கடன் ரசீது ம.சா.ஆ.1, 29-12-2016 தேதியிட்ட மருத்துவச் சான்று ம.சா.ஆ.2, 08-10-2015 தேதியிட்ட புகார் மனு ம.சா.ஆ.3, 05-02-2020 வங்கி கணக்கு விவரம் ம.சா.ஆ.4, 20-01-2011 தேதியிட்ட பதிவு விண்ணப்பம் ம.சா.ஆ.5, 02-12-2014 தேதியிட்ட போக்கிய ஒப்பந்தப் பத்திரம் ம.சா.ஆ.6, 23-02-2019 தேதியிட்ட O.A.No.242/2017 பதில் உரையின் அலுவலக நகல் ம.சா.ஆ.7 ஆக குறியிடப்படுகிறது. (ம.சா.ஆ.6 புகைப்பட நகல் ஆகும். அதன் அசல் வாடகைதாரர்கள் வசம் உள்ளதாகவும், வாடகைதாரர்களிடம் பெறப்பட்ட முன் பணத்தைக் கொடுத்தால் மட்டுமே அதனைப் பெற இயலும் என்பதால் அதனை தாக்கல் செய்ய இயலாது என்றும், தெரிவிக்கப்பட்டது. எனவே புகைப்பட நகலை குறியீடு செய்யும்படி கோரப்பட்டது.

அந்த ஆவணத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்வது குறித்து இறுதி விசாரணையின்போது முடிவு செய்யப்படும் என்ற உத்திரவுடன் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது)

(குறுக்கு விசாரணை வேண்டுதலின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/சி.ஏ.சேரன்,

ஒம்/கே.ராஜசேகர்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.